14.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தக்காளி விலை கிடுகிடு உயர்வு: கிலோ ரூ. 80!



ராணிப்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார வாரச்சந்தைகளில் தக்காளி விலை திடீரென உயர்ந்து, கிலோ ரூ. 80 வரை விற்பதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பெரும்பாலான வட மாவட்டங்களின் காய்கறி மொத்த மார்க்கெட் மற்றும் வாரச் சந்தைகளுக்கு, ஆந்திர மாநிலம், மதனப்பள்ளி, பலமநேர், புங்கனூர் ஆகிய பகுதிகளில் இருந்தும், கர்நாடக மாநிலம், சிந்தாமணி, கோலார், ஒட்டிப்பள்ளி ஆகிய பகுதிகளில் இருந்தும் நாள்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் மூலம், தக்காளி வரவழைக்கப்பட்டு, மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், ராணிப்பேட்டை சுற்றுவட்டாரத்தில் செயல்பட்டுவரும் வாரச் சந்தைகள், உழவர் சந்தைகள், சில்லரை காய்கறிக் கடைகளில் கடந்த சில நாள்களாக தக்காளி விலை திடீரென உயர்ந்து, அதிகபட்சமாக கிலோ ரூ. 80-க்கும் குறைந்த பட்சமாக ரூ. 70-க்கும் விற்கப்படுகிறது.

இந்த விலையேற்றம் குறித்து தக்காளி வியாபாரிகளிடம் கேட்ட போது:

கடந்த சில மாதங்களாக ஆந்திரம், கர்நாடக மாநிலங்களில் ஏற்பட்ட வறட்சி காரணமாக தக்காளிச் செடிகள் சாகுபடி குறைந்த காரணத்தால் உற்பத்தி குறைந்துள்ளது. வரத்து குறைவால் தக்காளியின் விலை உயரத் தொடங்கியுள்ளது.

வரும் நாள்களில் தக்காளி விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என்றனர். தக்காளி வாங்க வாரச் சந்தைக்கு வந்த பொதுமக்கள், திடீர் விலையேற்றம் காரணமாக அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## மேலூர், சோழவந்தானில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையங்கள்: ஆட்சியர்

மதுரை மாவட்டத்தில் மேலூர் மற்றும் சோழவந்தானில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையங்கள் ஜூன் 15 முதல் செயல்படும் என்று மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி: அரசு ஆதரவு விலைத் திட்டத்தின் கீழ் அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.59.50 வீதமும், பந்து கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.62.40 வீதமும் கொள்முதல் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் சோழவந்தான், வாடிப்பட்டி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திலும், மேலூர் தாலுகா வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திலும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மையங்கள் ஜூன் 15 ஆம் தேதி முதல் 6 மாதங்களுக்கு செயல்படும் என்று தெரிவித்துள்ளார்.

## பரமக்குடியில் பூச்சி மருந்து விற்பனை கடைகளில் வேளாண் துறை அதிகாரிகள் ஆய்வு

பரமக்குடியில் பூச்சி மருந்து விற்பனைக் கடைகளில் வேளாண் துறை அதிகாரிகள் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

விவசாயிகளுக்கு தரமான பூச்சி மருந்து கிடைத்திட, மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த முகாம்களில் அரசு அனுமதி பெற்ற பூச்சி மருந்துகள் எவை என்பது குறித்தும், பூச்சி மருந்துகளை வீடுகளில் பாதுகாப்பாக வைப்பது மற்றும் வயல்களில் பூச்சி மருந்தினை பயன்படுத்தும் விதம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மத்திய பூச்சி மருந்து வாரியம் பரிந்துரை செய்யாத பூச்சி மருந்துகள் பல்வேறு இடங்களில் விற்பனை செய்வதாகவும், இதுபோன்ற போலி பூச்சி மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்துவதால் பண விரயமும், மகசூல் இழப்புடன் சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படுவதாகவும் புகார்கள் எழுந்தன. அதனடிப்படையில், வேளாண்மை இணை இயக்குநர் ஆர். அரிவாசன் உத்தரவின்பேரில், பரமக்குடியில் உள்ள பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் ச. கண்ணையா தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில், மத்திய பூச்சி மருந்து வாரியம் பரிந்துரை செய்யாத பூச்சி மருந்துகள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டது. இந்த பூச்சி மருந்துகளை அப்புறப்படுத்துவதுடன், முற்றிலும் தடைசெய்ய வேண்டும் எனவும் வியாபாரிகளுக்கு எச்சரிக்கப்பட்டது. இந்த ஆய்வில், வேளாண்மை உதவி இயக்குநர் ஆல்பர்ட் ராபின்சன், வேளாண்மை அலுவலர்கள் ஜி. நாகராஜன், ல. முகம்மது சித்திக், எஸ். சீராளன் ஆகியோர் பங்கேற்றனர்.

## ரூ.5 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.5 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 276 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. குவிண்டாலுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,860 முதல் ரூ.6,200 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.5,300 முதல் ரூ. 5,750 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,400 முதல் ரூ.4,900 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.5லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 48 விவசாயிகளும், 5 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## ஜூன் 17-இல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

சேலம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஜூன் 17 ஆம் தேதி நடைபெற உள்ளது.

சேலம் மாவட்டத்தில் ஜூன் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஜூன் 17 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமையில், ஆட்சியரக (முதல் தள) கூட்டரங்கத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை சம்பந்தமான தங்கள் குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நாளை தொடக்கம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் புதன்கிழமை (ஜூன் 15) தொடங்கப்படவுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

மாவட்டத்தில் கொப்பரை கொள்முதல் செய்வது தொடர்பாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரகத்தில்

திங்கள்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் புதன்கிழமை கொப்பரை கொள்முதல் நிலையம் செயல்படத் தொடங்கும். பட்டுக்கோட்டையில் வெண்டாக்கோட்டை சாலை தென்னை வணிக வளாகத்தில் வாரத்தில் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமையிலும், பேராவூரணி பள்ளத்தூர் பிரதான சாலையில் உள்ள வேளாண் வணிக மையத்தில் புதன், வியாழன், வெள்ளிக்கிழமையிலும், ஒரத்தநாடு சி.எம்.எஸ். வளாகத்தில் வாரத்தில் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமையிலும் கொப்பரை கொள்முதல் நிலையம் செயல்படும்.

இந்த நிலையங்கள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். எனவே தென்னை பயிரிடும் விவசாயிகள் வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை அலுவலர்களை அணுகி உரிய அடையாள அட்டை பெற்று தங்களிடம் உள்ள கொப்பரைகளைக் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம்.

மேலும், கொள்முதல் நிலையங்களில் விவரங்கள் பெற ஒரத்தநாடு விவசாயிகள் 04372 - 233231 என்ற எண்ணிலும், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி விவசாயிகள் 04373 - 235045 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ. சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கைக்கு 2,200 டன் நெல் அரவைக்காக அனுப்பி வைப்பு

நீடாமங்கலத்திலிருந்து 2,200 டன் பொது ரக நெல் அரவைக்காக திங்கள்கிழமை சிவகங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து 150 லாரிகளில் 2,200 டன் பொது ரக நெல் திங்கள்கிழமை நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, சிவகங்கைக்கு சரக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டன.

## வலங்கைமான் பகுதியில் பாய் நாற்றங்கால் பணி

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் ஒன்றியத்துக்குள்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நடவு மற்றும் பாய் நாற்றங்கால் தயார் செய்வதை ஆட்சியர் எம். மதிவாணன் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

வலங்கைமான் வட்டம், ஆண்டாங்கோவிலில் இயந்திர நடவுப் பணி, வெண்ணாறு பாசனப் பகுதியில் விலையில்லா உழவு செய்து பசுந்தாள் உரப்பயிர் விதைப்பு பணி, ஆவூரில் இயந்திர நாற்று நடுவதற்கான பாய் நாற்றங்கால் தயார் செய்யும் பணி, கோடை உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ள பணியை ஆட்சியர் செய்தார்.

அப்போது, மாவட்டத்தில் 38,000 ஏக்கரில் நடவுப்பணி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 525 ஏக்கரில் இயந்திர நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 5,757 ஏக்கருக்கு பாய் நாற்றங்கால் விடப்பட்டுள்ளது என்றார் மதிவாணன். ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் க. மயில்வாகணன், வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நாளைமுதல் தொடக்கம்: மாவட்ட ஆட்சியர்

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதன்கிழமை (ஜூன் 15) முதல் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் தொடங்குகிறது என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: தமிழக அரசு தென்னை பயிரிடும் விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு 2016ஆம் ஆண்டில் விலை ஆதரவு திட்டத்தின்கீழ் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய ஆணையிட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில் உள்ள தோவாளை அகஸ்தீசுவரம் தாலுகா வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச்

சங்கம் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நிகழாண்டில் அரவை கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ. 59.50-க்கும், பந்து கொப்பரை ரூ. 62.40-க்கும் கொள்முதல் செய்யப்படவுள்ளது. இந்த திட்டம் ஜூன் 15ஆம் தேதி முதல் 180 நாள்களுக்குச் செயல்படுத்தப்படும்.

தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கொப்பரைத் தேங்காயை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் தேரூர் மற்றும் திங்கள்நகர் கிட்டங்கிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லும்போது கிராம நிர்வாக அலுவலர், வேளாண் அலுவலர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தங்களது முகவரி, சர்வே எண், நிலப்பரப்பு, தென்னை பயிரிட்டுள்ள அளவு குறித்த அடையாளச் சான்றிதழ், தங்களது பட்டா, சிட்டா, அடங்கல் சான்றிதழ் நகல்களுடனும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்கு இருப்பின் அந்த வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகலுடனும் செல்ல வேண்டும்.

சம்பந்தப்பட்ட விவசாயி, கொப்பரையை கொண்டு செல்ல இயலாவிடில், அவரது குடும்ப அட்டையிலுள்ள வயது வந்த நபர் கொண்டு செல்லலாம். விவசாயியிடமிருந்து ஒரு நாளில் அவரது ஆண்டு உற்பத்தியில் கால் பங்கு அல்லது 2500 கி.கி. இதில் குறைவான அளவு மட்டுமே கொள்முதல் செய்யப்படும். ஒரு கொள்முதலுக்கும் அடுத்த கொள்முதலுக்கும் இடையில் குறைந்த பட்சம் 45 நாள்கள் இருக்கவேண்டும்.

கொப்பரைக்கான தொகை, விவசாயிக்கு மின்னணு கணக்கு பரிமாற்றம் அல்லது கோடிட்ட காசோலை மூலம் 3 நாள்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தென்காசியில் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம்: நாளைமுதல் செயல்படும்**

தமிழக முதல்வரின் உத்தரவுப்படி தென்காசியில் புதன்கிழமை (ஜூன் 15) முதல் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் செயல்படத் தொடங்கும் என, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் கூறியது: தென்னை பயிரிடும் விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில் 2016ஆம் ஆண்டுக்கான விலை ஆதரவு திட்டத்தின் கீழ், கொப்பரை தேங்காய் கொள்முதல் மையங்களை அமைக்கவும், விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யவும் முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன்படி, திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் உள்ள தென்காசி-செங்கோட்டை வட்ட வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கொள்முதல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை முதல் 180 நாள்களுக்கு இந்த மையம் செயல்படும். நிகழாண்டு அரைவை கொப்பரை கிலோ ரூ.59.50-க்கும், பந்து கொப்பரை கிலோ ரூ.62.40-க்கும் கொள்முதல் செய்யப்படும்.

தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது கொப்பரை தேங்காய்களை கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு கொண்டுசெல்லும்போது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண் அலுவலர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட முகவரி, சர்வே எண், நிலப்பரப்பு, தென்னை பயிரிட்டுள்ள அளவு குறித்து அடையாளச் சான்றிதழ், பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் சான்றிதழ் நகல்களுடன் வர வேண்டும். மேலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்கு இருப்பின் அந்த வங்கிப் புத்தகத்தின் முதல் பக்க நகலையும் கட்டாயம் எடுத்துவர வேண்டும். தொடர்புடைய விவசாயி கொப்பரையை கொண்டு செல்ல இயலாதபட்சத்தில் அவரது குடும்ப அட்டையில் உள்ள வயதுவந்த நபர் கொப்பரையை கொண்டுவரலாம்.

விவசாயியிடம் இருந்து ஒரு நாளில் அவரது ஆண்டு உற்பத்தியில் கால் பங்கு அல்லது 2,500 கிலோ இவற்றில் எது குறைந்த அளவோ அவை

மட்டுமே கொள்முதல் செய்யப்படும். ஒரு கொள்முதலுக்கும் அடுத்த கொள்முதலுக்கும் குறைந்தபட்சம் 45 நாள்கள் இடைவெளி இருக்க வேண்டும்.

கொப்பரைக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மின்னணு கணக்குப் பரிமாற்றம் மூலம் அல்லது காசோலை மூலம் 3 நாள்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும். தமிழக முதல்வரின் இந்த சிறப்புத் திட்டத்தை திருநெல்வேலி மாவட்ட தென்னை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொப்பரை கொள்முதல் மையம் நாளை துவக்கம்: 6 மாதம் செயல்படும்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம், நாளை (15ம் தேதி) முதல் செயல்படும்.

ஈரோடு மாவட்டத்தில், 12 ஆயிரத்து, 271 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, சந்தையில் கொப்பரை தேங்காய் விலை, கிலோ, 50 ரூபாய்க்கும் குறைவாக உள்ளது. தென்னை விவசாயிகள் நலன் கருதி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்), பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 15ம் தேதி முதல் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் செயல்படுத்த உள்ளது. இங்கு, அரசு ஆதரவு விலை திட்டத்தின் கீழ், அரவை கொப்பரை தேங்காய் கிலோ, 59.50 ரூபாய்க்கும், பந்து கொப்பரை கிலோ, 62.40 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படவுள்ளது. விவசாயிகள் இங்கு விற்பனை செய்து பயன்பெறலாம். இம்மையம்

நாளை முதல், ஆறு மாதங்களுக்கு செயல்படும். இம்மையத்துக்கு தேங்காய் கொண்டு வரும் விவசாயிகள், தங்களது தோட்டத்தில் பயிரிட்டமைக்கான ஆதாரமாக, வி.ஏ.ஓ., சான்று, பட்டா, தென்னை விவசாயிகளுக்கான அடையாள அட்டை, சிட்டா அடங்கல், வங்கி கணக்கு எண், ரேஷன் கார்டு அட்டை நகல், தொலைபேசி எண் போன்றவைகளை சமர்ப்பிக்க வேண்டும், என கலெக்டர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## ஒட்டன்சத்திரத்தில் முருங்கை கிலோ ரூ.43

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கை விலை ஏற்றம் அடைந்து கிலோ ரூ.43 க்கு விற்றது.

அத்திக்கோம்பை, காவேரியம்மாபட்டி, அம்பிளிக்கை, கள்ளிமந்தையம், மார்க்கம்பட்டி, இடையகோட்டை பகுதிகளில் செடி முருங்கை அதிகமாக பயிரிடப்படுகிறது. கடந்த சில வாரங்களாகவே தொடர்ச்சியாக வரத்து குறைந்து கொண்டே வந்தது. இதனால் சில நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.20க்குவிற்ற செடி முருங்கை கடந்த வாரம் ரூ.30 க்கு விற்றது.

நேற்று ஒரு கிலோ செடி முருங்கை ரூ.43 க்கு விற்றது. கரும்பு முருங்கை ரூ.36க்கும், மரம் முருங்கைக்காய் ரூ.25 க்கும் விற்றது. வியாபாரி ஒருவர் கூறுகையில்,“ ஒரு கடைக்கு 5 மூடை முருங்கைக்காய் வரத்து இருந்தது, தற்போது ஒரு மூடை என்ற அளவில்தான் உள்ளது,” என்றார்.

சில மாதங்களுக்கு முன்பு முருங்கை கிலோ ரூ.100க்கும் மேல் விற்றது. விலை அதிகரித்துக் கொண்டே வருமாயின், விரைவில் ரூ.100 ஐ எட்டிப்பிடிக்கும் வாய்ப்பு உண்டு.

## நாவல்பழம் வரத்து இல்லாததால் விலை உயர்வு

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் நாவல்பழம் சீசன் துவங்கியும் வரத்து குறைவால் கிலோ ரூ.240 க்கு விற்பனையானது.

கால்சியம், இரும்புச்சத்து, புரதச்சத்து, மாவுச்சத்து என மருத்துவ குணம் கொண்ட நாவல்பழம் ஆண்டுகளில் சில மாதங்கள் மட்டுமே கிடைக்கும். திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, நத்தம், நிலக்கோட்டை, ரெட்டியார்சத்திரம், சாணார்பட்டி பகுதிகளில் 10 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. சர்க்கரை நோய், மூல நோய்க்கு மருந்தாகவும், இதன் கொட்டையும் மருந்து தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

நாவல் பழம் சீசன் காலத்தில் திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் 300 கிலோ வரை விற்பனைக்கு வரும். தற்போது சீசன் துவங்கி 2 வாரங்கள் ஆன நிலையிலும், பெரிய அளவில் சாகுபடி இல்லாததால் வரத்து குறைந்துள்ளது.

ஆந்திராவில் இருந்து தினமும் திண்டுக்கல்லுக்கு 400 கிலோ நாவல்பழம் விற்பனைக்கு வருகிறது. ஒரு கிலோ ஆந்திரா நாவல் ரூ.240 க்கு விற்பனையாகிறது.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,' இன்னும் சில வாரங்களில் உள்ளூர் வரத்து வர துவங்கினால் விலை குறைய வாய்ப்புள்ளது', என்றார்.

## முட்டை விலை 401 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 401 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று நடந்தது. அதில், முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 396 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, ஐந்து காசுகள் அதிகரித்து, 401 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 425, ஹைதராபாத், 373, விஜயவாடா, 371, பர்வாலா, 367, மும்பை, 415, மைசூர், 415, பெங்களூரு, 415, கொல்கத்தா, 413, டில்லி, 366 என, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டைக்கோழி, ஒரு கிலோ, 80 ரூபாய்க்கும், கறிக்கோழி, ஒரு கிலோ, 96 ரூபாய்க்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சிறுவாணியில் கன மழை

கோவை, : கோவை மேற்கு ெதாடர்ச்சி மலையடிவாரத்தில் கடல் மட்டத்தில் இருந்து 863.40 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள சிறுவாணி அணையில் 878.50 மீட்டர் அளவுக்கு வரை நீரை தேக்கமுடியும். சிறுவாணி அணையில் இருந்து மாநகராட்சியின் 38 வார்டுகளுக்கும், 22 வழியோர கிராமப்பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. கடந்த பருவமழைக்காலத்தில் சிறுவாணி அணையில் எதிர்பார்த்த மழையளவு இல்லை. இதனால் சிறுவாணி அணை நிரம்பவில்லை. நடப்பாண்டு பருவமழைக்காலம் தற்போது துவங்கியுள்ளது. இதனால் சிறுவாணி அணை மற்றும் அடிவாரப்பகுதியில் குறிப்பிட்ட அளவுக்கு மழை பெய்து வருகிறது.

சிறுவாணி அணையில் கடந்த 11ம் தேதி நிலவரப்படி 862.80 மீட்டரும், 12ம் தேதி நிலவரம் மற்றும் நேற்றைய நிலவரப்படி 862.90 மீட்டர் அளவுக்கும் நீர் இருப்பு உள்ளது. கடந்த 12ம் தேதி சிறுவாணி அணையில் இருந்து 53.50 எம்.எல்.டியும், நேற்றைய நிலவரப்படி 48 எம்.எல்.டியும் நீர் எடுக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்–திற்கு அனுப்பப்பட்டது. சிறுவாணி அணையில் 11ம் தேதி 51 மில்லி மீட்டர் அளவுக்கும், 12ம் தேதி 57 மில்லி மீட்டர் அளவுக்கும், நேற்றைய நிலவரப்படி 3 மில்லி மீட்டர் அளவுக்கும் மழைநீர் பெய்தது. சிறுவாணி

அணை அடிவாரப்பகுதியில் 11ம் தேதி நிலவரப்படி 13 மில்லி மீட்டர் அளவுக்கும், 12ம் தேதி நிலவரப்படி 23 மில்லி மீட்டர் அளவுக்கும் மழை பெய்தது.

சிறுவாணி அணை அடிவாரப்பகுதியில் நேற்றைய நிலவரப்படி மழையில்லை. 12ம் தேதி பெய்த மழையின் அளவுப்படி சிறுவாணி அணையில் நீர்மட்டம் 10 செ.மீ உயர்ந்துள்ளது. அதே அணையின் அளவு நேற்றும் இருந்தது. சிறுவாணி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான முக்தியாறு, பட்டியாறு, வெள்ளிங்கிரி ஓடைப்பகுதியில் மழை பெய்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி சிறுவாணி அணை நிரம்ப மேலும் 15.6 மீட்டர் அளவுக்கு நீர் தேவை.

சிறுவாணி அணைப்பிரிவு மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறுகையில்,‘ சிறுவாணி அணை மற்றும் அடிவாரப்பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் சில செ.மீ அளவுக்கு உயர்ந்துள்ளது. இந்த மாதத்தில் சிறுவாணி அணைப்பகுதியில் சராசரியாக 380 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவுக்கு நீர் பெய்தால், அணையின் நீர்மட்டம் மேலும் 5 மீட்டர் அளவுக்கு உயர்ந்து விடும் என தெரிவித்தனர்.

**பட்டு நூல் கிலோவுக்கு ரூ.75 உயர்வு**

கோவை, : கோவை பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில் உள்ள பட்டுக்கூடு விற்பனை நிலையத்தில் தினசரி பட்டுக்கூடுகள் விற்பனை நடக்கிறது. இதில் நேற்று (13ம் தேதி) நடந்த விற்பனைக்கு 1,200 கிலோ பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வந்தது. கோவை, திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். இவற்றை வியாபாரிகள் மற்றும் பட்டு கூட்டுறவு சங்கத்தினர் கொள்முதல் செய்தனர். விற்பனையில், நேற்று ஒரு கிலோ பட்டுக்கூடு குறைந்தபட்ச விலை கிலோ ரூ.301 ஆகவும், அதிகபட்ச விலை ரூ.446 ஆகவும், சராசரி விலை ரூ.413 ஆகவும் இருந்தது.

நேற்று பட்டு நூல் விலை கிலோ ரூ.3,048 ஆக இருந்தது. பட்டுக்கூடு விலை கடந்த 10ம் தேதியோடு ஒப்பிடுகையில் குறைந்தபட்ச விலை ரூ.62 குறைந்துள்ளது. அதிகபட்ச விலை ரூ.15ம், சராசரி விலை ரூ.10ம் உயர்ந்துள்ளது.

பட்டு நூல் விலை கிலோவிற்கு ரூ.75 உயர்ந்துள்ளது. பட்டுநூல் விலை உயர்விற்கேற்ப பட்டுக்கூடு விலை உயரவில்லை, வரும் நாட்களில் உயரும் வாய்ப்புள்ளது என்று பட்டுக்கூடு விற்பனை மைய ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

## சூறாவளி காற்றால் மேராக்காய் விளைச்சல் பாதிப்பு

குன்னூர், : குன்னூர் அருகே தூதூர்மட்டம், கிளிஞ்சடா, டெரேமியா, சட்டன், கரும்பாலம் உள்ளிட்ட கிராமங்களில் மலை தோட்ட காய்கறி பயிர்களான பீன்ஸ், கோஸ், உருளைக்கிழங்கு, மேராக்காய் உள்ளிட்டவற்றை விவசாயிகள் தங்களின் தங்களது நிலத்தில் பயிர்செய்து வருகின்றனர். இங்குள்ள பெரும்பாலான விவசாய நிலங்களை சுற்றிலும் வனப்பகுதியும், தேயிலை தோட்டங்களும் சூழ்ந்துள்ளதால் வனப்பகுதியை விட்டு வன விலங்குகள் உணவு மற்றும் குடிநீர் தேடி விவசாய நிலங்களில் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருவது தொடர் கதையாக உள்ளது.

இந்நிலையில் மாவட்டத்தில் தற்போது சூறாவளி காற்றுடன் பரவலாக மழை பெய்து வருகிறது. தூதூர்மட்டம், கிளிஞ்சடா, சட்டன், கரும்பாலம் உள்ளிட்ட பகுதியிலுள்ள விவசாயிகள் பெரும்பாலும் மேராக்காய் பயிரை விவசாயம் செய்து வருகின்றனர். இப்பயிர் சூறாவளி காற்றால் கொடியில் இருந்து கீழே விழுந்தும் மழையில், அழுகிவிடுகிறது. நஷ்டம் அதிகம் ஏற்படும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை அல்லது மாவட்ட நிர்வாகம் உரிய மானியம் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 95 சதவிதம் தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 23வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 9.14லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 5.70லட்சம் கிலோவும். டஸ்ட் ரகம் 3.44லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றதால் 95 சதவித தேயிலை தூள் விற்பனையானது. இதில் அனைத்து ரக தேயிலை தூளுக்கும் ரூ.1 விலை அதிகரித்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.82முதல் ரூ.84, உயர் வகை ரூ.100 முதல் ரூ.140, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.92 முதல் ரூ.93 வரையிலும், உயர் வகை ரூ.110 முதல் ரூ.160 வரை விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.181, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.253விலை வழங்கப்பட்டது.

## 65 ஆயிரம் விவசாயிகளுக்கு மண்வள அட்டை விநியோகம்

ஈரோடு, : உலக மண் வள ஆண்டையொட்டி தேசிய அளவில் தரிசு நிலங்களின் தன்மையை ஆய்வு செய்யவும், உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில் வேளாண் துறை மூலம் மண் வள ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 375 வருவாய் கிராமங்களில் இருந்து 1 லட்சம் விவசாயிகளுக்கு சொந்தமான தரிசு நிலங்களில் இருந்து மண்மாதிரி எடுத்து ஆய்வு செய்து மண்வள அட்டை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நடப்பாண்டில் இதுவரை 65,041 விவசாயிகளுக்கு மண்வள அட்டை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் சாவித்திரி, சிறப்பு வேளாண் அலுவலர் ஜெயமணி, வேளாண் அலுவலர் சுமையா ஆகியோர் கூறியதாவது: மானாவாரி, ஆயக்கட்டு மற்றும் தரிசு நிலங்களில் மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்வதன் மூலம் மண்ணின் வளம் குறித்த தகவல்களை சேகரிக்க மத்திய வேளாண் துறை உத்தரவிட்டுள்ளது.

அதன்படி நடப்பாண்டில் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 1 லட்சம் விவசாயிகளுக்கு சொந்தமான நிலத்தின் மண்ணை எடுத்து அதில் உள்ள மண் நயம், கார, அமில நிலை, சுண்ணாம்பு நிலை மற்றும் மண்ணில் உள்ள அங்கக சத்துக்கள், கால்சியம், மெக்னீஷியம், சோடியம், கந்தகம் போன்றவற்றின் அளவுகள் குறித்து அறிந்து மண் வள அட்டை வழங்கப்படும். மண்ணில் உள்ள சத்துக்களின் அடிப்படையில் அது களர் நிலமா? விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமா என்பதையும் விவசாயிகளுக்க பரிந்துரை செய்கிறோம்.

இதன் மூலம் அந்த நிலத்தில் என்னன்ன பயிர்களை சாகுபடி செய்யலாம் என்பதை அறிந்து கொள்ள இயலும். அந்த வகையில் இதுவரை மாவட்டம் முழுவதும் 65,041 விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

வரும் மார்ச் 2017க்குள் 1 லட்சம் விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்கப்படும். மானாவாரி, தரிசு நிலங்கள் மட்டுமின்றி ஆயக்கட்டு பாசன நிலங்களிலும் எடுக்கப்பட்ட மண் மாதிரி ஆய்வுகள் மூலம் குறைந்த உரம், பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.

தனியே மண் மாதிரி பரிசோதனை செய்தால் குறைந்தபட்சம் ரூ.250 செலவாகும். ஆனால் இலவசமாக நாங்கள் மண் மாதிரி பரிசோதனை செய்து தருவதன் மூலம் நிலங்களில் தேவையில்லாமல் கூடுதல் உரங்களை பயன்படுத்துவதை தடுக்க முடியும். இவ்வாறு வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பீன்ஸ் விலை கிலோ ரூ.75 ஆக உயர்வு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்தே காய்கறிகள் பெரும்பாலும் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதில் காலிபிளவர், கேரட், பீட்ருட், பீன்ஸ், நூல்கோஸ் உள்ளிட்ட காய்கறிகள் மேட்டுப்பாளையம், ஊட்டி, குன்னூர், கொடைக்கானல் உள்ளிட்ட பகுதியிலிருந்து அதிகம் கொண்டு வரப்படுகிறது. இதில் பீன்ஸ், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு

அதிகளவில் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. அப்போது, ஒரு கிலோ ரூ.35 முதல் அதிகபட்சமாக ரூ.45 வரை விலைபோனது. சில நாட்கள் கிலோ ரூ.30க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந் நிலையில், கடந்த சில வாரங்களாக வெளியூர்களில் இருந்து பீன்ஸ் வரத்து மிகவும் குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது. தற்போது ஒரு கிலோ பீன்ஸ் ரூ.65 முதல் ரூ.75 வரை விற்கிறது. வரத்து இன்னும் குறையும்போது, விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ஒழுங்குமுறை கூடத்தில் 10.56 குவிண்டால் பருத்தி ஏலம்

பாபநாசம், : பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் 10.56 குவிண்டால் பருத்தி ரூ.50,625க்கு ஏலம் போனது.பாபநாசம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏலம் நடை பெற்றது. 10.56 குவிண்டால் பருத்தி ரூ.50,625க்கு ஏலம் போனது. குப்பை மேடு, களஞ்சேரி, எடக்குடி, அக்கரைப்பூண்டி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 9 விவசாயிகள் மட்டுமே கலந்து கொண்டனர்.

அதிகப்பட்ச தொகையாக ரூ.5,009க்கும், குறைந்தபட்சமாக ரூ.4,679க்கும், சராசரியாக ரூ.4,783க்கு ஏலம் போனது. தஞ்சாவூர் விற்பனைக்குழு செயலாளர் ரவி, விற்பனை கூட கண்காணிப்பாளர் பிரியமாலினி ஆகியோர் கலந்து கொண்டனர். ஏலம் நடைபெறுவது குறித்து முன்கூட்டியே தெரிவிக்கப்படாததால் விவசாயிகள் அதிகளவில் பங்கேற்காமல் போனதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

**குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம் பூதலூர் வட்டாரத்திற்கு ரூ.72 லட்சம் நிதி ஒதுக்கீடு ேவளாண்மை உதவி இயக்குனர் தகவல்**

திருக்காட்டுப்பள்ளி, : பூதலூர் வேளாண்மை வட்டாரத்திற்கு குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின் கீழ் ரூ.72,46,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின் கீழ் பூதலூர் வட்டாரத்திற்கு ரூ.72,46,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோக மேலும் ஒரு சலுகையாக 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கிட தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

பூதலூர் வட்டாரத்தில் நடவு இயந்திரம் மூலம் பயிர் நடவு செய்வதற்காக ஒரு ஏக்கருக்கு மானியமாக ரூ.4,000 வீதம் 1325 ஏக்கரில் நடவு செய்திட ரூ.53,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயந்திரத்தின் மூலம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களது ஆழ்குழாய் கிணறுகளில் நீர் இருப்பினை உறுதி செய்து கொண்டு கோ 51, ஏடிடி36 மற்றும் ஏஎஸ்டி16 ஆகிய நெல் ரகங்களை கொண்டு தேவையான பாய் நாற்றாங்கால் அல்லது தட்டு நாற்றாங்கால் தற்போது முதற்கொண்டே தயார் செய்திட வேண்டும். இவ்வாறு நடவு செய்யும் விவசாயிகள் சிட்டா அடங்கல் மற்றும் வங்கி புத்தகத்தின் நகல் பிரதி ஆவணங்களை சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி அலுவலரிடம் கொடுக்க வேண்டும். களஆய்வு முடிந்தவுடன் ஏக்கருக்கு ரூ.4000 வீதம் பணிமுடிவு மானியமாக சம்மந்தப்பட்ட விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். நடவு இயந்திரம் கொண்டு நடவு செய்வதனால், குறுவை சாகுபடியை விரைந்து முடிக்கலாம்.

மேலும் பயிரில் தூர்களின் எண்ணிக்கையை அதிகபடுத்துவதற்காகவும், தூர்களில் பூக்கின்ற பூக்கள் அனைத்தும் தானியமாக மாறவும், தானியங்களின் எடை கூடவும் முக்கிய நுண்சத்துகளை அடக்கிய நெல் நுண்ணூட்டக் கலவை ஏக்கருக்கு ரூ.170 மானியம் வீதம் 300 ஏக்கருக்கு ரூ.51,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் துத்தநாக சல்பேட் என்ற நுண்ணுரம் ஏக்கருக்கு ரூ.400 மானியம் வீதம் 800 ஏக்கருக்கு ரூ.3,20,000, மண் வள பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் கூடுதல் வருவாய் பெறுவதற்காகவும் 1125 ஏக்கரில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்வதற்காக ஏக்கருக்கு ரூ.1400 மானியம் வீதம் ரூ.15,75,000, நீரை சேதாரமின்றி வயலுக்கு எடுத்து சென்று பாய்ச்சுவதற்காக 3 இன்ச் பைப்புகள் 10 யூனிட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பூதலூர் வட்டாரத்தை சேர்ந்த இதற்கு முந்தைய ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் பயனடையாத விவசாயிகள் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

## 2,200 டன் பொதுரக நெல் அரவைக்காக அனுப்பி வைப்பு சிவகங்கை மாவட்டத்துக்கு

நீடாமங்கலம், :நீடாமங்கலத்திலிருந்து சிவகங்கை மாவட்டத்துக்கு 2,200 டன் பொதுரக நெல் அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.திருவாரூர் மாவட்டத்தில் சம்பா, தாளடி, கோடை சாகுபடி செய்த நெல்கள், பல்வேறு சேமிப்பு கடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மன்னார்குடி அருகில் உள்ள பாமனி மத்திய சேமிப்பு கிடங்கு, அஷேசம், தெற்கு நத்தம், துளசேந்திரபுரம், மூவாநல்லூர், தலையாமங்கலம், நீடாமங்கலம் அருகில் உள்ள ஆதனூரில் உள்ள திறந்தவெளி சேமிப்பு கிடங்குகளிலிருந்து 150 லாரிகளில் 2,200 டன் பொதுரக நெல், நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு நேற்று கொண்டு வரப்பட்டது. பின்னர் அங்கிருந்து 42 ரயில் வேகன்களில் அரவைக்காக சிவகங்கை மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# இன்றைய வேளாண் செய்திகள்

## அவல்பூந்துறை ஒழுங்குமுறைக்கூடத்தில் நாளை முதல் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் தொடக்கம் கலெக்டர் தகவல்



ஈரோடு,

அவல்பூந்துறை ஒழுங்குமுறைக்கூடத்தில் நாளை (புதன்கிழமை) முதல் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் தொடங்கப்படுவதாக கலெக்டர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார். ஈரோடு மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கொப்பரை தேங்காய்

ஈரோடு மாவட்டத்தில் 12 ஆயிரத்து 271 ஹெக்டர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தற்போது சந்தையில் கொப்பரை தேங்காயின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.50–க்கும் குறைவாக உள்ளதால்,

தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். அதனால் அவர்களின் நலன் கருதி தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்) மூலம் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நாளை (புதன்கிழமை) முதல் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் தொடங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் அரவை கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு 59 ரூபாய் 50 காசுக்கும், பந்து கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு 62 ரூபாய் 40 காசுக்கும் என்ற ஆதார விலையின் அடிப்படையில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட உள்ளன.

<u>அடையாள அட்டை</u>

விவசாயிகள் நேரடி கொள்முதல் நிலையங்களில் நல்ல விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம். இந்த நேரடி கொள்முதல் நிலையங்கள் நாளை (புதன்கிழமை) முதல் அடுத்த 6 மாதங்களுக்கு செயல்படும். மேலும் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையத்திற்கு விவசாயிகள் கொண்டுவரும் கொப்பரை தேங்காயினை தங்களது தோட்டத்தில் பயிரிட்டதற்கு ஆதாரமாக கிராம நிர்வாக அதிகாரியின் சான்று, பட்டா, தென்னை விவசாயிகளுக்கான அடையாள அட்டை, சிட்டா அடங்கல், வங்கி கணக்கு எண், ரேஷன் கார்டு நகல் மற்றும் கைபேசி எண்ணினை தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## அந்தியூர் சந்தையில் காய்கறிகள் விலை அதிகரிப்பு தக்காளி கிலோ ரூ.70–க்கு விற்பனை



அந்தியூர்

அந்தியூர் வாரச்சந்தையில் வாரம்தோறும் திங்கட்கிழமை காய்கறிகள் விற்பனை நடைபெறும். அதன்படி நேற்று விற்பனை நடந்தது. இந்த சந்தைக்கு சேலம், தர்மபுரி, நாமகிரிபேட்டை, நாமக்கல், கொல்லிமலை, கர்நாடக மாநிலம் மைசூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தார்கள்.

அந்தியூரை சுற்றியுள்ள கிராம மக்கள் வந்து காய்கறிகளை வாங்கி சென்றார்கள். கடந்த வாரம் தக்காளி கிலோ ரூ.60–க்கு விற்பனை ஆனது. ஆனால் இந்த வாரம் தக்காளி கிலோ ரூ.10 அதிகரித்து ரூ.70–க்கு விற்பனை ஆனது. அதேபோல் முட்டைக்கோஸ், பீட்ரூட், கேரட், பீன்ஸ், முருங்கைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறும்போது, மழை பெய்யாததால் காய்கறிகளின் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது’ என்றனர்.

## முகூர்த்த நாட்கள் இல்லாததால் சேலத்தில் பூக்களின் விலைவீழ்ச்சி சன்னமல்லி கிலோ ரூ.100-க்கு விற்பனை



முகூர்த்த நாட்கள் இல்லாததால் சேலத்தில் பூக்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நேற்று சன்னமல்லி கிலோ ரூ.100-க்கு விற்பனை செய்யப்பட்டது.

விலை வீழ்ச்சி

சேலம் கடைவீதியில் வ.உ.சி. பூ மார்க்கெட் உள்ளது. இந்த பூ மார்க்கெட்டிற்கு விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் பூக்கும் பூக்களை கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். தற்போது போதிய சுபமுகூர்த்த நாட்கள் இல்லாததால் பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேநேரம் தற்போது மார்க்கெட்டிற்கு பூக்கள் வரத்தும் குறைந்துள்ளது.அதாவது, சன்னமல்லி கிலோ ரூ.100-க்கும், குண்டுமல்லி கிலோ ரூ.130-க்கும், கனகாம்பரம் கிலோ ரூ.160-க்கும், சம்பங்கி கிலோ ரூ.20-க்கும், சாமந்தி கிலோ ரூ.100-க்கும், பட்டன் ரோஸ் கிலோ ரூ.60-க்கும், கோழிக்கொண்டை கிலோ ரூ.40-க்கும், அரளி கிலோ ரூ.20-க்கும், கலர் பூ கிலோ ரூ.30-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

முகூர்த்த நாட்கள்

கடந்த வாரத்தை ஒப்பிடுகையில் இந்த பூக்களின் விலை நேற்று மிகவும் குறைந்துள்ளது. சீசன் இல்லாததால் காக்கட்டான் பூ மார்க்கெட்டிற்கு வரத்து இல்லை. இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறும்போது, 'மார்க்கெட்டிற்கு கடந்த வாரம் மல்லூர், பனமரத்துப்பட்டி, வாழகொட்டப்பட்டி, வீராணம் உள்ளிட்ட பகுதியில் இருந்து 10 டன் குண்டுமல்லி வந்தது.

போதிய விளைச்சல் இல்லாததால் நேற்று வெறும் 5 டன் குண்டுமல்லி மட்டுமே வந்தது. மேலும், சுபமுகூர்த்த நாட்கள் இல்லாத காரணத்தினால் பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இன்னும் சில நாட்கள் பூக்களின் விலையில் பெரிதளவு மாற்றம் இருக்காது' என்றனர்.

## தஞ்சையில் இருந்து தேனிக்கு 1,250 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி

நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக் காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் பிள்ளையார்பட்டி, நாஞ்சிக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருந்து லாரிகளில் புழுங்கல்அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,250 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து இந்த சரக்குரெயில் தஞ்சையில் இருந்து தேனிக்கு புறப்பட்டு சென்றது.

## பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணையில் தூரவாரும் பணிகள் விரைவில் தொடக்கம்




பெரியகுளம்,

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே சோத்துப்பாறை அணை உள்ளது. இந்த அணையை கட்டும் பணிகள் கடந்த 1989–ம் ஆண்டு தொடங்கிய நிலையில், 2001–ம் ஆண்டு அணை பயன்பாட்டுக்கு வந்தது. இந்த அணையில் இருந்து பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பையன்பட்டி கண்மாய் ஆகியவற்றுக்கு தண்ணீர் செல்கிறது. மேலும் சுமார் 2 ஆயிரத்து 865 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் தென்கரை, லட்சுமிபுரம், மேல்மங்கலம், ஜெயமங்கலம், குள்ளப்புரம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் வடுகபட்டி பேரூராட்சி ஆகிய பகுதி மக்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இருந்து வருகிறது.

இந்த அணையின் பின் பகுதியில் அதிக அளவில் மணல் படிந்துள்ளது. இதனால் அதில் அதிக அளவில் தண்ணீரை தேக்க முடியாத நிலை இருந்து வருகிறது. எனவே அணையினை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அணையினை துீர்வார முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக

பொள்ளாச்சியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் இருந்து பெரியகுளத்தில் உள்ள மஞ்சளாறு வடிநில கோட்ட அலுவலகத்திற்கு ஒரு படகு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அணையில் தூர்வாரும் பணிகள் ஓரிரு நாட்கள் தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.